


**02.07.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. இந்தியா கானா நாடுகளிடையே முதலீடுகள் எரிசக்தி சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை பிரதமர் திரு.நரேந்திரமோடி மேற்கொள்கிறார்.

2. கோவிட் தடுப்பூசிக்கும், திடீர் மரணங்களுக்கும் தொடர்பில்லை என்று மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

3. சிவகங்கை மாவட்டம் திருபுவனத்தில் போலீஸ் காவலில் உயிரிழந்தவர் குடும்பத்தினருக்கு பணிநியமனம் மற்றும் இலவச வீட்டுமனை பட்டாவிற்கான ஆணைகளை மாநில அரசு வழங்கியுள்ளது.

4. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கால்நடைகளுக்கான கோமாரி தடுப்பூசி முகாம் இன்று தொடங்கியது.

5. இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பர்மிங்ஹாமில் பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

************

<u>பிரதமர்</u>

தெற்கு நாடுகளின் சிறந்த நட்புறவு நாடாக கானா திகழ்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

5 நாடுகளுக்கு தமது 8 நாள் பயணத்தின் முதற்கட்டமாக இன்று கானா செல்வதற்கு முன்னர் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அந்நாட்டுனான நட்புறவையும், ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என்றார்.

முதலீடு, எரிசக்தி, சுகாதாரம், பாதுகாப்பு, திறன்மேம்பாடு வேளாண் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பை தாம் எதிர்நோக்கிஉள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

கானாவில் பிரதமருக்கு சிறப்பான பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்படுவதோடு அதிபர் ஜான் மகாமாவுடன் பிரதமர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்கிறார்.

பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாக உள்ளன.

கானா பாராளுமன்றத்தில் பிரதமர் சிறப்புரையாற்றுகிறார்.

தொடர்ந்து தமது பயணத்தின் இரண்டாவது கட்டமாக **Trinidad - Tobago,** நாடுகளுக்கு நாளை செல்லும் பிரதமர் அந்நாட்டு தலைவர்களை சந்தித்து பேசுகிறார்.

தமது 8 நாள் அரசு முறை பயணத்தின் அடுத்த கட்டங்களாக வரும் 9ஆம் தேதிவரை அர்ஜென்டினா, பிரேசில், நமீபியா நாடுகளுக்கு செல்லும் பிரதமர் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

************

<u>சுகாதாரத்துறை</u>

கோவிட் 19 தடுப்பூசிகளுக்கும், திடீர் மரணங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் ஆய்வறிக்கை தெரிவிப்பதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இந்தியாவின் கோவிட் 19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை, ஆற்றல்மிக்கவை என்றும், மிக அரிதாகவே பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழ்க்கை முறை, இணை நோய்கள், மரபியல், கோவிட்டிற்கு பிந்தைய உடல் சூழல்கள் காரணமாகவே திடீர் மாரடைப்புகள் ஏற்படுவதாகவும், இந்த அறிக்கை மேலும் கூறுவதாக அமைச்சகம் கூறியுள்ளது.

18 வயது முதல் 45 வயதிற்குட்பட்டோருக்கு ஏற்படும் திடீர் மரணங்கள் குறித்து ஆராய்வதற்காக இந்திய மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனமும், தேசிய நோய் தடுப்பு மையமும் இணைந்து இந்த ஆய்வுகளை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இந்திய மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி குழுவின் 2023ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி தேசிய அளவிலான எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கையில் கர்நாடகம் தமிழகம் தெலங்கானா மாநிலங்களின் பங்கு 24 சதவிகிதமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மூன்று மாநிலங்களில் உள்ள 17 மாவட்டங்களில் எயிட்ஸ் நோயாளிகளுக்கான சேவை அதிக அளவில் தேவைப்படுவதாக இந்த ஆய்வறிக்கை மேலும் கூறுகிறது.

************

<u>குவாட்</u>

இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் தடையற்ற வர்த்தகம் மேற்கொள்ள குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் உறுதியேற்றுள்ளனர்.

தற்போதுள்ள நிலையை மாற்றுவதற்கான தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு குவாட் நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

கிழக்கு மற்றும் தெற்கு சீன கடற்பகுதிகளில் நிலவும் நிலைமை குறித்து கவலையை வெளியிட்டுள்ள குவாட் நாடுகள், சர்வதேச சட்டங்களை

நடைமுறைபடுத்துவதோடு, இறையான்மை மற்றும் எல்லை பாதுகாப்பை உறுதி செய்வதன் அவசியத்தையும் கூட்டறிக்கையில் வலியுறுத்தியுள்ளன.

கடற்பகுதி மற்றும் வான்பகுதிகளில் உள்ள சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை பேணுவதன் அவசியத்தையும் இந்நாடுகள் எடுத்துரைத்துள்ளன.

************

<u>முதலமைச்சர்</u>

சிவகங்கை மாவட்டம் திருபுவனம் வட்டம் மடப்புரம் கிராமத்தில் காவல்துறை விசாரணையின்போது உயிரிழந்த அஜித்குமாரின் வழக்கை சிபிஐ-க்கு மாற்றி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஆணை பிறப்பித்துள்ளார்.

இவ்வழக்கில் வெளிப்படைதன்மை மற்றும் நேர்மையான விசாரணை நடைபெற ஏதுவாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், **CBI** விசாரணை மூலம் இவ்வழக்கின் உண்மை நிலவரங்கள் தெரியவரும் என்று நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அஜித்குமாரின் குடும்பத்தினருடன் தாம் அலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டதோடு அக்குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று உறுதியளித்ததாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே உயிரிழந்த அஜித்குமாரின் சகோதரருக்கு பணிநியமன ஆணையை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் இன்று நேரில் வழங்கியதோடு இலவச வீட்டுமனை பட்டாவிற்கான ஆணையையும் அளித்தார்.

இதனிடையே தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் மூவாயிரத்து 177 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் மண்டபத்தில் 32 இணைகளுக்கு இன்று நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய முதலமைச்சர் கடந்த 4 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 326 இணைகளுக்கு திருமணம் நடத்திவைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

************

<u>கோமாரி நோய் தடுப்பூசி</u>

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இன்று தொடங்கியது.

அரியலூர் மாவட்டத்தில் 72 இடங்களில் இம்முகாம் நடைபெறுகிறது.

ஒன்றரை லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட உள்ளன.

மதுரை சாமனத்தம் கிராமத்தில் இம்முகாமை ஆட்சித்தலைவர் திரு.பிரவீன்குமார் துவக்கிவைத்துடன் கால்நடைகளுக்கான ஊட்டசத்து பெட்டகத்தையும் வழங்கினார்.

நாமக்கல் மாவட்டத்தில் கால்நடை உதவி மருத்துவர்கள் ஆய்வாளர்கள் பராமரிப்பு உதவியாளர்கள் கொண்ட 105 குழுக்கள் தடுப்பூசி போடும் பணிகளை மேற்கொண்டுள்ளன.

ஈரோடு உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது.

************

<u>அன்பில் மகேஷ்</u>

தமிழகத்தில் ஆசிரியர் தகுதி தேர்வு குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வுக்கூட்டத்தில் இன்று பேசிய அவர், காலிப்பணியிடங்கள் காரணமாக குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதில் அரசு கவனம் செலுத்தி வருவதாக கூறினார்.

மாநில கல்வி கொள்கை தொடர்பான விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும், இதுபோன்ற ஆய்வுக்கூட்டங்கள் பிற மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக நடத்தப்படும் என்றும் கூறினார்.

************

<u>விழுப்புரம்</u>

விழுப்புரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினருக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் 6 கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

************

<u>இருவரி</u>

தூத்துக்குடி மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் 90 சதவிகித குடிநீர் விநியோகப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாநகராட்சி மேயர் திரு.ஜெகன் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறை செய்துகொள்ள காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள ஆட்சித்தலைவர் திரு.அருண்ராஜ் அறிவுறுத்தினார்.

************

<u>சேலம்</u>

தேசிய மாணவர் படையினரின் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு திறன் மேம்பாட்டு பயிற்சி சேலத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிகள் இம்மாணாக்கரின் படைப்பாற்றல் திறனை மேம்படுத்துவதோடு நாட்டுப்பற்றையும் மேம்படுத்துவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

கோவில்

சிதம்பரம் அருள்மிகு நடராஜர் திருக்கோவிலின் ஆனி திருமஞ்சனம் இன்று நடைபெறுகிறது.

இன்றுகாலை மகா அபிஷேகம் நடைபெற்ற நிலையில் திருமஞ்சன பெருவிழா நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

கிரிக்கெட்

ஆன்டர்சென் டெண்டுல்கர் கோப்பைக்கான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே பர்மிங்ஹாமில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் தற்போது முன்னிலையில் உள்ளது.

***********

டென்னிஸ்

விம்பிள்டன் கிரான்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் ரோஹன்போபண்ணா, பெல்ஜியத்தின் சாண்டர் கில் இணை - ஜெர்மனி இணையை இன்று எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் யூக்கி பாம்ப்ரி அமெரிக்காவின் கேலோவே இணை – ஃபிரான்சின் மேனுவல் மொனாகோவின் ரோமைன் இணையுடன் மோதுகிறது.

***********